முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 994

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.06.2022, ஞாயிற்றுக்கிழமை

1. அறம்வேலி கொண்ட அண்ணலே
ஆற்றல்பட இந்த உலகை மாற்ற
வரம்பெற்று என் சக்தியாக வந்த
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 05 நாள், 19.06.2022 ஞாயிற்றுக்கிழமை)
இனிமைபட அரங்கன் உன் தர்மமே
இந்த உலகத்தை மீட்டெடுக்க நேரும்
3. நேர்மைகொண்ட அரங்கன் உன் சன்மார்க்கமே
நிலவுலகை பாதுகாப்பு மிக்க உலகமாக மாற்றக்கூடும்
கூடவே அரங்கனின் தொண்டர்படைகளை
குவலயத்தை ஞான வழி வழிநடத்தி
4. ஆற்றல்மிக்க ஞான பூமியாகவும்
ஆளுமைகள் ஞான ஆட்சிக்காலமாகவும்
ஆகவே உருவாகி இனிதே
அகிலம் ஆறுமுகன் என் தலைமைக்கு வர நேரும்
5. வகைபட நித்தம் நித்தம் அரங்கனுக்குள்
வரங்களை கூட்டி ஆறுமுகன் யான்
மிகையான ஞான சக்தி பெருக்கி வருகின்றேன்
மேன்மைகொண்டு அரங்கன் திருவடி பற்றினால் போதும்
6. போதுமப்பா உலகோர்க்கு அழியாமை கிட்டும்
பிறப்பு இனி இல்லாத உயர் வாழ்வாக மாறும்
மாறுதலை செய்யும் மாதவசி அரங்கன்
மக்களை காக்க வந்த உயர் ஞானி
7. ஆறுதலும் அரங்கனின் அருட்தயவும்
அகிலத்தில் எவர் பெற்றாரோ அவர்களெல்லாம்
ஞானிகளாவது உறுதி உறுதி
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–